Deposition of witness

(Chapter XXII Code of Criminal Procedure)

முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கிருஷ்ணகிரி

| | | | |
|---|---|---|---|
| அமர்வு வழக்கு எண். | SC.No. 197 of 2019 | அரசு தரப்பு | அ.சா. 8 |
| பெயர் | திரு. எத்திராஜன் | எதிரி தரப்பு | |
| தகப்பனார் பெயர் | | வயது | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | | |

**Solemnly affirmed in accordance with the provision of Act 1969 of 28th day of October 2025**

__முதல் விசாரணை__

நான் தற்போது வேலூரில் வசித்து வருகிறேன். நான் 30.06.2008-ல் மதுரை வட்டார போக்குவரத்து அலுவலகம் தெற்கில் வட்டார போக்குவரத்து அலுவலராக பணியாற்றி ஓய்வு பெற்றேன். நான் 28.06.2001-ல் மோட்டார் ஆய்வாளராக அரூரில் பணியாற்றி வந்த போது, கல்லாவி காவல் நிலைய குற்ற எண். 359/2001 வழக்கில் சட்ட பிரிவுகள் 147, 148, 341 இதச, உ/இ 3 & 4 of PPDL Act-ன் படி கல்லாவி காவல் நிலைய ஆய்வாளர், சேதமடைந்த பேருந்து எண். 1771 அதன் சேத மதிப்பீட்டு அறிக்கை தர வேண்டி கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் சேத மதிப்பீட்டு அறிக்கை சமர்ப்பித்தேன். அந்த பேருந்தில் ஏற்பட்ட சேத மதிப்பீடு ரூ.1,85,000/- என்று நான் சேத மதிப்பீட்டு அறிக்கை தயார் செய்து கொடுத்தேன். அந்த சேத மதிப்பீட்டு அறிக்கை நகல் அ.சா.ஆ. 5 ஆக குறியிடப்படுகிறது. (எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் இந்த ஆவணத்தினை குறியீடு செய்ய ஆட்சேபனை இல்லை என்று தெரிவிக்கின்றார்). என்னை இந்த வழக்கு சம்மந்தமாக கல்லாவி காவல் நிலைய ஆய்வாளர் விசாரணை செய்தார்.

__எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :__

நான் இந்த வாகனத்தினை எந்த இடத்தில் வைத்து பரிசோதனை மேற்கொண்டேன் என்றால் விபத்து எங்கு நடந்ததோ அதே இடத்தில் வைத்து

பரிசோதனை மேற்கொண்டேன். நான் சொன்ன இடத்தில் ஆய்வு மேற்கொண்டதாக செல்வது தவறு என்றால் சரியல்ல. வாகனத்தினை காவல் நிலையத்தில் அன்றைய தினமே எடுத்து சென்றுவிட்டார்கள் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. 3 நாட்கள் கழித்தும் சம்பவ இடத்திலேயே வாகனம் இருந்ததாக நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. உடைந்ததாக சொல்லும் பொருட்கள் ஒவ்வொன்றிக்கும் தனித்தனியாக அதன் மதிப்பீடு கொடுக்கப்படவில்லை என்றால் நான் மொத்தமாக அறிக்கையை கொடுத்துள்ளேன். அவ்வாறு மொத்தமாக அறிக்கை கொடுக்க இயலாது என்றால் சரியல்ல. உடைந்த போன ஒவ்வொரு பொருளுக்கும் நான் தனிப்பட்ட மதிப்பீட்டினை கொடுத்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல. இந்த பொருட்கள் இவ்வளவு மதிப்புடையது என்று மதிப்பீடு செய்து நான் சான்றிதழ் வழங்கினேனா என்றால் முழுமையாக வண்டி எரிந்துவிட்ட காரணத்தினால் ஒரே அறிக்கையாக கொடுத்தேன். போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் தவறான அறிக்கையை கொடுத்தேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

Taken down by me in open Court interpreted/read to the witness and acknowledged by him/her to be correct.

LATHA V R Digitally signed by LATHA V R

Principal Sessions Judge,

Krishnagiri.